# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் களத்தில் சண்டை செய்யத் தயாரான உடன்பிறப்புகள்!

குதிரை பேர த.வெ.க. ஆட்சி அமைந்த 100 நாட்களில், தமிழ்நாடு மக்கள் மீது தேவையற்ற இடைத்தேர்தல் திணிக்கப்பட்டிருக்கிறது. விஜய்க்கு தமிழ்நாட்டு மக்கள் அறுதிப் பெரும்பான்மையை வழங்கவில்லை. **காரணம், அனைத்துத் தரப்பு மக்களுக்குமான தலைவராக அவர் இல்லை. சரியாகச் சொல்வதென்றால் அவர் தலைவரே இல்லை.**

சினிமாவை மூலதனமாக்கி, ரசிகர்களிடம் வாக்குகளை அறுவடை செய்தவருக்கு, தி.மு.க. கூட்டணியில் இருந்த கட்சிகள்தான் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, த.வெ.க.வை ஆதரித்து ஆட்சியமைக்க உதவின. பலன் எதிர்பார்த்துச் சென்ற கட்சிகள் மீது முழு நம்பிக்கையை விஜய்யும் அவரது கட்சி நிர்வாகிகளும் வைக்கவில்லை. அதனால்தான், அ.ம.மு.க. சார்பில் வெற்றி பெற்ற ஒரு எம்.எல்.ஏ.வைக் காரில் அழைத்துச் சென்று ஆதரவுக் கையெழுத்து வாங்கினார்கள். முஸ்லிம் லீக்கின் இரண்டு எம்.எல்.ஏ.க்களில் ஒருவரின் ஆதரவை மட்டும் ஆளுநரிடம் அளித்த கடிதத்தில் த.வெ.க. தெரிவித்திருந்தது.

5 ஆண்டுகள் எதிர்க்கட்சியாக இருந்தபிறகும் ஆட்சியைப் பிடிக்க முடியாமல் போய்விட்டதே என்ற பரிதவிப்பில் இருந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களில் ஒரு பகுதியினரிடமும் குதிரை பேரம் நடத்தப்பட்டு, அவர்களும் நம்பிக்கை வாக்கெடுப்பில் த.வெ.க. அரசை ஆதரித்த கூத்தை தமிழ்நாட்டு மக்கள் பார்த்தார்கள். கட்சித் தாவல் தடைச்சட்டம் பாயும் என்று தெரிந்தவுடன், அதில் ஒரு சிலர் தங்கள் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வதாக சபாநாயகரிடம் கடிதம் கொடுத்துவிட்டு, அடுத்த சில நிமிடங்களில் கோட்டையிலேயே த.வெ.க.வில் இணையும் விழாவை நடத்தினர். இவையெல்லாம் தமிழ்நாட்டு அரசியலில் இதுவரை எவரும் பார்த்திராத 'சீன்'கள். அந்த 'சீன்'கள் ஒவ்வொன்றும் ரீல்ஸ்களாகப் பரப்பப்பட்டன.

**ஊழலே செய்யாத உத்தமர் வேடம் போடும் விஜய், கட்சி ஆரம்பிப்பதற்கு முன்பே, தன் ரசிகர்களிடமே அதிக விலைக்குத் தன் படத்தின் டிக்கெட்டுகளை விற்றுக் கொள்ளையடிக்கும் தொழில்நுட்பத்தை அறிந்தவர். கலர்ப்படங்களால் அள்ளிக் குவித்த கருப்புவெள்ளை பணத்தைக் கணக்கு காட்டாமல் வருமான வரி ஏய்ப்பு செய்து, அதற்காக வழக்கை எதிர்கொண்டவர். கட்சி தொடங்கியபிறகும், மாவட்டப் பதவிஎம்.எல்.ஏ. சீட் என்று த.வெ.க. நிர்வாகிகள் பேரம் நடத்தி கோடி கோடியாகச் சுருட்டியதை சொந்தக் கட்சிக்காரர்களே வெட்ட வெளிச்சமாக்கிய பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்காதவர். தன்னை நம்பி ஆதரிப்பவர்களை முட்டாள்களாக்கும் வேலையை விஜய் தொடர்ந்து செய்து வருகிறார்.**

முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் குவாரி ஊழல் குட்கா ஊழல் எனப் பல ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டு வழக்குகளைச் சந்தித்து வரும் இரண்டு விஜயபாஸ்கர்களை த.வெ.க.வில் இணைத்திருக்கிறார், ஊழலை ஒழிக்கும் உத்தமர் போல நடிக்கும் விஜய். மேலும் சில அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் இணைந்து, இடைத்தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு, த.வெ.க.வின் எம்.எல்.ஏ.க்களாக சட்டமன்றத்திற்கு செல்லலாம் என கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்.

பதவியை ராஜினாமா செய்தவர்களில் மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளின் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் அடக்கம். அவர்கள் ராஜினாமா செய்த தொகுதிகளுக்கு மட்டும் தேர்தல் ஆணையம் இடைத்தேர்தலை அறிவித்துள்ளது. குதிரை பேரம் நடந்த மற்ற தொகுதிகளில் தேர்தல் தொடர்பான வழக்குகள் நடைபெறுவதைக் காரணம் காட்டி இந்த இரண்டு தொகுதிகளுக்கு மட்டும் அக்டோபர் 6ந் தேதி இடைத்தேர்தல் வாக்குப் பதிவாம். 9ந் தேதி வாக்கு எண்ணிக்கையாம்.

தேர்தல் ஆணையத்தின் சூழ்ச்சியான அறிவிப்புகள் குறித்து அரசியல் விமர்சகர்கள் பலரும் கருத்துகளைப் பதிவிட்டு வருகிறார்கள். ஒரு தலைப் பட்சமாக இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருவதை எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகள் உள்பட பலவற்றிலும் நேரடியாக அனுபவித்திருக்கிறார்கள் வாக்காளர்கள். மோசமான அனுபவங்களைத் தரும் மோசடியான நடைமுறைகள் ஒவ்வொரு தேர்தலிலும் தொடர்கின்றன. இடைத்தேர்தலும் அதற்கு விதிவிலக்கல்ல.

**திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை தேர்தல் களம்போராட்டக் களம் என எந்தக் களத்தையும் எதிர்கொள்ளத் தயங்கியதில்லை. "ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களின் உரிமைகளைக் காக்க சண்டை செய்வோம்" என்று கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுதான் உடன்பிறப்புகளின் உணர்வு. குதிரை பேரத்தால் இடைத்தேர்தல்களைச் சந்திக்கும் தொகுதிகளுக்கு மொத்தமாக தேர்தல் நடத்தினாலும், த.வெ.க.வின் முதலாளியான பா.ஜ.க அரசு சொல்வதற்கேற்ப, பிரித்துப் பிரித்து பிட்டு பிட்டாகத் தேர்தல் நடத்தினாலும் தி.மு.க.வினருக்கு அது மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு. அவர்களிடம் உரையாற்றவும், பரப்புரை செய்யவும் கிடைக்கின்ற தருணம்.**

மதுராந்தகம் தாராபுரம் ஆகிய இரண்டு தனித் தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், வேட்பாளர்களைத் தேர்வு செய்து அறிவித்த முதல் கட்சி என்ற பெருமையைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உரித்தாக்கியிருக்கிறார் கழகத் தலைவரான நம் திராவிட நாயகர். **மதுராந்தகம் தொகுதியில் கழகத்தின் சட்டத்துறை இணைச்செயலாளர் இ.பரந்தாமன் போட்டியிடுகிறார். தாராபுரம் தொகுதியில் வழக்கறிஞர் சுகன்யா போட்டியிடுகிறார்.**



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்.

கழகம் தனது வேட்பாளர்களைக் களமிறக்கிய பிறகு, ஆளுங்கட்சியான த.வெ.க. தனது வேட்பாளர்களை அறிவித்தது. இரண்டு தொகுதிகளிலும், தங்கள் பதவியை ராஜினாமா செய்த 'குதிரை பேரம்' புகழ் எம்.எல்.ஏ.க்களே மீண்டும் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

**100 நாட்களுக்கு முன்பு இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டவர்கள், சுவரில் வரைந்த சின்னமும் எழுதப்பட்ட பெயரும் அழிவதற்குள்ளாகவே விசில் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள். 'பருத்தி மூட்டைகள் குடோனிலேயே இருந்திருக்கலாம்' என்பது போல, இவர்கள் தங்களுக்கு கிடைத்த வெற்றியின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்களாகவே தொடர்ந்திருக்கலாமே? ஏன் ராஜினாமா செய்தார்கள்?**

மக்களுக்கு ஒட்டுக்குப் பணம் தராமல் ஜெயித்தோம் என வெற்று வசனம் பேசும் த.வெ.க, அந்த மக்கள் ஓட்டுப் போட்டதால் ஜெயித்த எம்.எல்.ஏ.க்களை மொத்தமாகப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கியது. 'லாட்டரி' பணத்தில், கட்சி தாவிய அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு 'பம்பர் பரிசு' அடித்தது. த.வெ.க.வை ஆதரிக்க விருப்பமில்லாத காரணத்தால்தான் மதுராந்தகம், தாராபுரம் மக்கள் இரட்டை இலையை வெற்றி பெற வைத்தார்கள்.

**வாக்களித்த மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு, தங்களை ஆளுங்கட்சியிடம் அதிக விலைக்கு விற்றுக் கொண்டார்கள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள். இப்போது, த.வெ.க வேட்பாளர்களாகக் களமிறங்குகிறார்கள். இதுதான் ஜனநாயகமா? இதுதான் ஊழலற்ற அரசியலா? இடைத்தேர்தல்கள் நடைபெறும் தொகுதிகளில் இந்தக் கேள்விதான் மக்கள் மனதில் முதன்மையாக எதிரொலிக்கும். எதிரொலிக்க வேண்டும். உடன்பிறப்புகள் அதனை முழுமையாக எதிரொலிக்கச் செய்ய வேண்டும்.**

- 100 நாட்களில் 200க்கும் அதிகமான கொலைகள்.

- த.வெ.க. பெண் நிர்வாகிகளுக்கு த.வெ.க. எம்.எல்.ஏ.க்களாலேயே பாலியல் கொடூரங்கள்.

- கட்டுபாடற்ற வகையில் போதை மருந்துப் புழக்கம்.

- த.வெ.க அமைச்சரே பவுடர் நுணுக்குகிறார்.

- சொந்தக் கட்சி வழக்கறிஞர்களிடமே லஞ்சம் வாங்கி அரசு வழக்கறிஞர் பணி நியமனம் என த.வெ.க. பெண் வழக்கறிஞரே புகார் தெரிவிக்கிறார்.

- யார் மீது புகாரோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், புகார் கொடுத்தவர்கள் மீதே த.வெ.க. தலைமை நடவடிக்கை எடுக்கிறது.

- காவல்துறையிடம் பாதுகாப்பு கேட்டு புகார் சொன்னவர்கள் அடுத்த சில நாட்களில் கொலை செய்யப்படுகிறார்கள்.

- சென்னை கோவை எனப் பல நகரங்களும் கொலை நகரங்களாகிவிட்டன.

- தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வக்கில்லை.

- அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நிர்வாகத் திறனில்லை.

- குடிநீர் விநியோகத்தைக் கூட கவனிக்கத் துப்பில்லை.

- மின்கட்டணம் தாறுமாறாக உயர்ந்து 'ஷாக்' அடிக்கிறது. இரவு நேரத்தில் மின்வெட்டு பாடாய்ப் படுத்துகிறது.

- தொழில் முதலீடுகளை ஆந்திராவுக்குத் தாரை வார்த்தாகிவிட்டது. இளைஞர்களுக்கு வேலை இல்லை.

- ரீல்ஸ் மட்டுமே கிளுகிளுப்பாக வெளியிடப் படுகிறது.

இப்படி ஒரு மோசமான ஆட்சியை மக்களிடம் அம்பலப்படுத்த கிடைத்த நல்வாய்ப்பாக இரண்டு தொகுதிகளின் இடைத்தேர்தலைப் பயன்படுத்த உடன்பிறப்புகள் களமிறங்குகின்றனர்.

**நேரடியாக களத்தில் இறங்கி மக்களை வீடு வீடாகச் சென்று சந்தித்து வாக்கு சேகரிப்பதுடன், சமூக வலைதளங்கள் வாயிலாக ஒவ்வொருவர் கையிலும் உள்ள செல்போனிலும் உண்மைத் தகவல்களைக் கொண்டு சேர்த்து, த.வெ.க.வின் மோசடிகளைத் தோலுரித்துக் காட்டும் செயல்பாடுகளும் இடைத்தேர்தல் களத்தில் வேகமாக நடக்கும்.**

கழகத் தலைவரின் கட்டளையை ஏற்று களத்திலும், சமூக வலைத்தளத்திலும் செயல்படும் உடன்பிறப்புகளின் அயராத உழைப்பு கழக வேட்பாளர்களின் வெற்றிக்குக் கட்டியம் கூறும்.

**வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட நாளில் கழகப் பொதுச்செயலாளர் சொன்னதுபோல, எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் அண்ணாநகர், மயிலாடுதுறை இடைத்தேர்தல்களில் தி.மு.க. பெற்ற வெற்றியின் வரலாறு, மதுராந்தகம் தாராபுரம் தொகுதிகளிலும் தொடரட்டும்!**

### இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் கால கட்டிடங்களை

## தொன்மை மாறாமல் புதுப்பிக்க வேண்டும்!

### சட்டப் பேரவையில் காதர்பாட்சா முத்துராமலிங்கம் வலியுறுத்தல்!

*சென்னை, செப். 12 - பேரவையில் இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேதுபதி மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களை தொன்மை மாறாமல் புதுப்பிக்க வேண்டும் என்று காதர்பாட்சா முத்துராமலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.*

*இது குறித்து பேரவையில் நடந்த விவாதங்கள் வருமாறு:-*

**காதர்பாட்சா முத்துராம லிங்கம்:** *ராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில், தொன்மையான கோட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது. கடந்த திராவிட மாடல் ஆட்சியில் தொன்மை மாறாமல் புதுப்பிப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சேதுபதி மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள். . .*



*சேதுபதி மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட அந்தக் கட்டடங்களை, தொன்மை மாறாமல் பராமரித்துத் தருவீர்களா எனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு, போதிய வசதிகளுடன்கூடிய புதிய கூட்ட அரங்கம் ஒன்று வேண்டும். பழைய கட்டடமானது 1991ல் கட்டப்பட்ட கட்டடம். மழைக் காலங்களில் கூட்ட அரங்கமாகப் பயன்படுத்துவதற்கு, அதில் போதுமான வசதிகள் இல்லை. எனவே, புதிய கூட்ட அரங்கம் அமைக்க வேண்டுமென்றும் தங்களிடத்தில் கோரிக்கை வைக்கிறேன்.*

**அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்:** *பழமைவாய்ந்த கட்டடங்களை யெல்லாம் புதுப்பித்தலைப் பொறுத்தவரை, அக்கட்டடங்களுக்கு stability இருந்தால், பழமை மாறாமல் புதுப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

*மேலும், மாவட்ட ஆட்சியரகத்தில் கூட்ட அரங்கம் சரியாக இல்லை என்று சொன்னார்கள். அதையும் மனதிலே வைத்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*

### சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

## தேனியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. – நா.இராமகிருஷ்ணன் அறிவிப்பு!





*தேனி, செப். 12- தேனி வடக்கு, தெற்கு மாவட்டச் செயலாளர்கள் தங்கதமிழ்செல்வன் எம்.பி., என்.ராமகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-*

*தலைமை கழக அறிவிப்பின்படி தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் இன்று (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் சட்டமன்றத்தில் முதலமைச்ச ரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.*

*இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., கம்பம்.என்.ராமகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை க. வீரைய்யா
### செப்டம்பர் 12 (1993)



புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.


நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.

தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்
### செப்டம்பர் 12 (2019)



வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களின் ஒருவர்.

ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பிராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**